**இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 24 மற்றும் 27 ஆம் பந்திகளுக்கு முரணாக செயற்பட்ட பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>• கடந்த ஆண்டின் நிதி செயலாற்றல் அறிக்கையில் காட்டப்படாத ரூபா 12,413,670 ஆன விசேட செயற்திட்ட பெறுவனவு வருமானமாக காட்டப்பட்டுள்ளது.<br>• திரட்டப்பட்ட மிகைக்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 89,948,884, மிகையாக சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 65,891,654 சீராக்கப்பட்டிருந்தமை.<br>• கடந்த ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியங்கள் ரூபா 34,000,000 வருமானமாக கணக்கிற்கு சீராக்கப்பட்டதால் தேறிய உரிமையிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டு ஆனால் தொடர்ந்தும் பயன்பாட்டில் உள்ள சொத்து, பொறி உபகரணங்களின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் , தற்போது நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற் முழுமையாக தேய்மானமிடப்பட்டு முடிக்கப்பட்ட ரூபா 271,211,449 ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 19 இற்கு முரணாக ஆண்டில் பெறப்படுகின்ற அடுத்த ஆண்டு வரையிலான ரூபா 7,904,870 ஆன கற்கைநெறி வருமானம் முழுவதும் ஆண்டிற்கான வருமானமாகக் கருதப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 6,650,070 ஆல் அதிகமாகக் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 48 இற்கு முரணாக செயற்திட்டமொன்றுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 11,480,080ஆன மீதியொன்று, செலுத்த வேண்டிய மீதிகளுக்கு எதிராக ஈடு செய்யப்பட்டு செயற்திட்டத்திற்கான செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தொழில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டின் மீதமுள்ள தொகையிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 25 பத்திக் பயிற்சி நிலையங்களுக்கான செலவுகளைச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால் இந்தத் தொகை செயற்திட்ட செலவு மீதிக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி மற்றும் கட்டப்பட்ட சுவர் என்பவற்றின் கிரயம் முறையே ரூபா 3,787,086 மற்றும் ரூபா 4,280,489 ஆனது காணியின் | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | தேய்மானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்துடன் சேர்க்கப்பட்டிருந்தும் தேய்மானம் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | செய்தித்தாள் விளம்பரக் கட்டணமாக செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 184,380 உம் , கட்டிடம் பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 197,807 உம் , ஆக மொத்தம் ரூபா 382,187 ஆன செலவுகள் கட்டிடக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டிருந்தன. | சொத்துக்களை கையகப்படுத்துவதில் ஏற்படும் செலவுகள் மற்றும் கட்டிடங்களை நவீனமயமாக்குவதன் மூலம் ஆயுட்காலம் நீட்டிக்கப்படுவதால் மூலதனமாக்கப்பட்டிருந்ததாக. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | வகுப்பறைகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் iv ஆம் கட்டத்தின் கீழ், இன்டர்லொக் நடைபாதை (Interlock Paving) கிரயமான ரூபா 2,732,536 ஆனது காணியின் கிழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அதன் தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கிரயம் காணியின் பெறுமதியில் சேர்க்கப்பட்டதால், தேய்மானம் செய்ய முடியாதிருந்தமை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாத பாடநெறிக்காக வழங்கப்பட்ட ரூபா 495,000 விலைப்பட்டியலொன்று அந்த ஆண்டிற்கான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டதால், வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் அத்தொகையால் அதிகரித்திருந்தது. | அப்பெறுமதிக்கு வேறொரு பாடநெறியொன்று 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளதாக. | ஆண்டிற்கான வருமானம் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,824,583 ஆன ஊழியர் ஊக்குவிப்பு படிகளுக்கு அட்டுறு ஒதுக்கமொன்று செய்யப்படாததுடன் கடந்த ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,101,042 ஆன ஊக்குவிப்பு படிகள் ஆண்டின் செலவொன்றாக அங்கீகரிக்கப்படடிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் எதிர்காலத்தில் திருத்தப்படுவதாக. | ஆண்டிற்கான செலவுகள் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில், பாடநெறிகளுக்காக பெறப்பட்டிரந்த முற்பணம் ரூபா 1,145,101 சரியாக அங்கீகரிக்கப்படடு வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வர்த்தகக் கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மாணவர்களால் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருந்த பாடநெறிக் கட்டணங்கள் இந்தக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பாடநெறி தொடங்கப்பட்டதன் பின்னர் அதற்கான கட்டணத்தை குறிப்பிட்ட பாடநெறிக்கு செலவு வைப்பதன் மூலம் இந்தக் கணக்கின் மீதி திர்க்கப்படுவதாக. | உடனடியாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய வர்த்தக மீதிகள் ரூபா 11,323,009 இல் 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்த ரூபா 6,524,257 ஆன மீதியும் , 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரை அறவிடப்படாதிருந்த ரூபா 1,577,681 ஆன மீதியும் காணப்பட்டதுடன் அந்த கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உடனடியாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவை | | | |
| | நி.பி 396 | 2023 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் வழங்கப்பட்டு 6 மாதங்கள் மற்றும் 4 ஆண்டுகள் வரை வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 299,508 தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவு | ரூபா 05 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள ஒவ்வொரு ஒப்பந்தமும் பெறுகை ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது பொது ஒப்பந்தச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் உடன்படிக்கைப் பெறுமதி | எதிர்கால உப்பந்தங்களுக்காக பதிவு செய்தல் மற்றும் ஆவணங்கள் சேர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ரூபா 72,001,840 ஆன 4 பெறுகைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 219,994,455 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 89,948,884 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 130,045,571 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மூலதன மானியப் பெறுவனவு ரூபா 166,000,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டு முதல் 65 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பத்திர கற்கை நெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 05 சான்றிதழ் பத்திர கற்கைநெறிகளுக்காக மட்டும் தேசிய தொழில்சார் தகைமைகளை (NVQ) பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. | TVEC உடன் ஏனைய கற்கை நெறிகளுக்காக் NCS (National Competency Standards) தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் , அவை நிறைவடைந்ததும் விரைவில் NVQ இனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கற்கை நெறிகளின் தரத்தினையும் அதிகளவான வரவேற்புக்களையும் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் கட்டிடமொன்றை கட்டுவதற்கு திட்டம் தயாரித்தல், மண் பரிசோதனை மற்றும் இதர செலவுகளுக்காக செய்யப்பட்ட ரூபா 3,762,600 ஆன செலவு நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணம் அல்லது மீதிகள் திர்ப்பனவ செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நான்கு செயற்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பெறப்பட்ட தொகையிலிருந்து மீதமுள்ள தொகை ரூபா 9,065,986 வழங்கிய நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படாமல் மீளாய்வாண்டு வரை தக்க வைக்கப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | உடனடியாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வார நாட்களில் (Week day) நடாத்த திட்டமிடப்பட்ட 4 டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்படாமையால் ரூபா 4,240,000 ஆன பயிற்சி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு பாடநெறியும் தனித்தனியாகக் கருத்தில் கொள்ளப்படும்போது சரிவொன்று ஏற்பட்டாலும் அந்த 12 பாடநெறிகளில் 8 இற்கு 50% இற்கு அதிகமான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த பாடநெறிகளை நடாத்தும் போது நிறுவனம் இலாபம் பெறும் வகையில் இப்பாட நெறிகள் ஏனைய பாடநெறிகளுடன் இணைத்து செயல்படுத்தப்பட்டுள்ளதாக. | திட்டமிட்டதன் பிரகாரம் பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற குறைவாகப் பன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,962,335 பெறுமதியான HTHPS Dyeing இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வாழை நார் நூலை வணிக மயப்படுத்துவதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தும் அறிக்கைத் திகதி வரை வாழை நார் நூல் தயாரிப்பொன்று மேற்கொள்ளப்படவில்லை. | வாழை நார் ஆராய்ச்சி தொடர்பான நூல் சாயமிடுவதற்கு இந்த இயந்திரம் பயன் படுத்தப்படுகிறது. வணிக ரீதியாக நூலுக்கு சாயமிடுவதற்கு அரச மற்றும் தனியார் நல்லிணக்கத்துடன் செயற்படக் கூடிய சேவை முன்மொழிவொன்று பெறப்படுவதற்கு செயற்பட்டு வருவதாக. | இயந்திரம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பெபாறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது 2024 யூன் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை அமைச்சிற்கு 2024 மார்ச் 12 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட திகதியில் அறிக்கை முன் வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |